திருக்கோவிலூரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்.

178—(*வினா எண் 4655) திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் நகரத்தில் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மேலும் வீடுகள் கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் நகரமானது வருவாய்க் கோட்டத்தினுடைய தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே பல்வேறு அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அதிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்குத் தற்போது குடியிருப்பு வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அதற்கு முன்னுரிமை கொடுத்து வருகின்ற ஆண்டிலாவது வீடுகள் கட்டித்தர வீட்டு வசதி வாரியம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 60 வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நிதிநிலைக்கேற்ப அரசு பிறகு பரிசீலிக்கும்.

திரு. வி. பி. சிந்தன்: அவைத் தலைவர் அவர்களே, ஆலை அதிபர்களுடன் கலந்து பேசி, தொழிலாளர்களுக்கு வீடு கட்ட ஹட்கோவினுடைய உதவியையும் பயன்படுத்திக் கொண்டு திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூரில்-அது 'டிவிஷனல் ஹெட் குவார்ட்டார்ஸ்'—அங்கே கூடுதலாக வீடு கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் எந்தத் தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.